**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

**<u>அசல் வழக்கு எண். 19 /2020</u>**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு. கருணாகரன், Junior Assistant என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2023ம் ஆண்டு மார்ச் திங்கள் 16ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். ஞானப்பிரகாசம் (PW3 ) வயது. | நாள் **16/03/2023** |
| த/பெ. கோவிந்தசாமி | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>வா.சா.3 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு சூனாம்பேடு சொந்த ஊர் இல்லை என்றால் சரிதான். வன்னியநல்லூருக்கும் சூனாம்பேட்டிற்கும் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும்.

2. நான் சூனாம்பேட்டில் 1991 லிருந்து 1994 வரைக்கும் கிராம நிர்வாக அலுவலகராக பணி செய்தேன். தற்போது நான் ஓய்வு பெற்றுவிட்டேன்.

3. தாவா சொத்திற்கு பழைய சர்வே எண். 762/2 ஆகும். புதிய சர்வே எண் பற்றி எனக்கு தெரியாது. இறந்துபோன ஆறுமுகம் என்பவர் 788 சதுர அடி கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. சீலாதேவியிடமிருந்து தாவா சொத்தை வாதி எந்த வருடம் கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி தாவா சொத்தை எந்த தேதியில் கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. ஆனால் கிரையம் பெற்ற விவரம் மட்டும் எனக்கு தெரியும்.

5. வாதி கிரையம் பெற்ற இடத்திற்கு கிழக்கால் பார்த்த வாசல்படி உள்ளது என்றால் சரிதான். மேற்கில் வாதிக்கு வாசல்படி உள்ளதா என்றால் முன்பு இருந்தது, தற்போதும் மேற்கில் வாசல்படி உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் மேற்கு பக்கத்தில் வாசல்படி உள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

6. வாதியின் வீட்டிற்கு தெற்கால் முதல் பிரதிவாதி வீடு உள்ளது என்றால் சரியல்ல, வாதியின் வீட்டிற்கு வடக்கால் தான் முதல் பிரதிவாதியின் வீடு உள்ளது. வரதராஜனுக்கு கிழக்கிலும், வடக்கிலும் வாசல்படி உள்ளது என்றால் கிழக்கில் கடை வைத்துள்ளார், வடக்கில் மட்டும் தான் வாசல்படி உள்ளது.

7. வரதராஜன் அனுபவித்து வரும் சொத்து அவருக்கு பூர்விகமாக கிடைக்கபெற்ற சொத்து என்றால் வரதராஜனின் அப்பா காலத்திலிருந்து அனுபவித்து வருகிறார் என்ற விவரம் மட்டும் எனக்கு தெரியும். ஆறுமுகம் கிரையம் பெறுவதற்கு முன்பிலிருந்து வரதராஜன் வடக்கு பக்கத்திலுள்ள இடத்தை அனுபவித்து வருகிறார்.

8. பொதுவாக, கிரையப்பத்திரத்தில் என்ன விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த விஸ்தீரணம் தான் பட்டவிலும் குறிப்பிடப்படும் என்றாலும் அளவுக்கு அதிகமாக குறிப்பிடப்படாது என்றால் சரிதான்.

9. ஆறுமுகம் சீலாதேவி அனுபவித்து வந்த வீட்டுடன் சேர்த்து தான் சீலாதேவியிடமிருந்து அதன் நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்கால் காலி மனை வாதியின் அனுபவித்தில் தான் உள்ளதா என்பதை சீலாதேவியிடம் கேட்டால் தெரியுமா என்றால் சீலாதேவிக்கும் தெரியும் மற்றவர்களுக்கும் தெரியும்.

10. நான் இறந்துபோன ஆறுமுகத்தின் உறவினரா என்றால் இல்லை. வரதராஜன் வீட்டிற்கு மேற்கால் காலி மனையில் தென்னை மரம் உள்ளதா என்றால் வரதராஜன் வீட்டின் மேற்கில் காலி மனை இல்லை.

11. ஆறுமுகத்தின் கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆறுமுகத்தின் வீட்டிற்கு மேற்கில் காலி மனை இல்லை. வேலாயுதம் முதலியார் வீடு உள்ளது.

12. வாதி மற்றும் பிரதிவாதிகள் வீட்டிற்கு நடுவில் சுமார் 9 அடி இடைவெளி இருக்கும். வாதி 788 சதுர அடி மட்டும் தான் கிரையம் பெற்றார் என்றாலும் அதற்கு நான் தான் இரண்டு செண்டிற்கு பட்டா வாங்கி கொடுத்தேன் என்றால் சரியல்ல.

13. வாதி வீட்டிற்கு மேற்கால் உள்ள காலி மனையை வாதி தான் அனுபவித்தார் என்று தவறாக அவருக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு மேற்கால் வாசல்படி இல்லை என்றால் சரியல்ல.

## 5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

14. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தயார் செய்தது அல்ல என்றால் சரியல்ல. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும்.

15. வாதி எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. ஜக்குபந்தி பற்றி மட்டும் தான் எனக்கு தெரியும். தாவா சொத்தின் விஸ்தீரணம் சுமார் 2 லிருந்து 2 1/2 சென்ட் ஆகும்.

16. பொதுவாக ஒருவர் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெருகிறார்களோ அவ்வளவு விஸ்தீரணத்திற்கு மட்டும் தான் உரிமை கொண்டாட முடியும் என்றால் சரிதான்.

17. பொதுவாக எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெறுகிறார்களோ அதைத்தான் மற்றவர்களுக்கும் கிரையம் கொடுக்க முடியும் என்றால் நத்தம் செட்டில் மெண்டில் கூடவோ அல்லது குறையவோ விஸ்தீரணம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால் அதை ஒப்பிட்டு கிரையம் கொடுக்கலாம்.

18. இவ்வழக்கில் சீலாதேவி, சிவானந்தம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றது 1 முக்கால் செண்ட் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதே போல் சீலாதேவி ஆறுமுகத்திற்கு அதே 1 முக்கால் செண்டை தான் கிரையம் கொடுத்தார் என்றால் அதுபற்றியும் எனக்கு தெரியாது.

19. சீலாதேவியிடமிருந்து ஆறுமுகம் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். கிரையத்தின் போது நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் செல்லவில்லை.

20. தாவா பி. அட்டவணை சொத்து சீலாதேவி எந்த காலத்திலும் கிரையம் பெறவில்லை என்றாலும் அதனால் அவர் உரிமை கொண்டாட இயலாது என்றாலும் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் சீலாதேவி பி அட்டவணை சொத்தை ஆறுமுகத்திற்கு எப்போதும் கிரையம் கொடுத்ததில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

21. வாதி ஆறுமுகம் எனது தாய்மாமா என்றால் சரியல்ல. வாதி ஆறுமுகம் எனது தாய்மாமா என்றாலும், உறவு முறையை மறைத்து அவருக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தை இன்று வரை 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் பலவந்தமான கைப்பற்றி அனுபவித்து வருகிறார்.

**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- Tmt. N. Preethi.,
DM Cum JM,
Cheyyur